DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST (POA) ACT 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 19/2024**

அ.சா. 23

Prosecution witness
(Witness examined through video conferencing in accordance with Madras High Court video conferencing Rules 2020)

| | | | |
|---|---|---|---|
| Name: | திருமதி B. தீபா | Caste: | |
| Father's Name: | பாஸ்கரன் | Calling: | அறிவியல் அலுவலர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 42 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 17.10.2025.

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் இயற்பியில் பிரிவில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.10.2024 ம் தேதி இராமநாதபுரம் பட்டியலிட்ட ஜாதியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு நீதிமன்ற அமர்வு நீதிபதி அவர்களின் கடித எண். 519, நாள் 25.07.2024 ன் படி கமுதி காவல்நிலைய கு.எண் 37/2024 தொடர்புடைய வழக்கு பொருளான கைபேசி, அயிட்டம் எண் 1 லிருந்து வெளிக்கொணரப்பட்ட புகைப்படங்கள் மற்றும் காணொலிபதிவுகளை மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வக கணினி தடயவியல் பிரிவு அறிக்கை எண்.MDU/CF/107/2024 நாள். 08.10.2024 ன் படி குறிப்பிட்டுள்ளவாறு துணை இயக்குநர் வட்டார தடய அறிவியல் ஆய்வகம், மதுரை அவர்களின் கடித எண்.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2025.10.17 13:53:34 +0530

MDU/CF/67/2024 நாள் 08.10.2024ன் படி திரு செல்வகணேஷ், அறிவியல் அலுவலர், வட்டார தடய அறிவியல் ஆய்வகம், மதுரை அவர்களின் மூலம் 09.10.2024 அன்று புகைப்படங்கள் மற்றும் காணொளி பதிவுகள் அடங்கிய DVD ஒன்றை ஆய்விற்காக பெறப்பட்டது.

அந்த DVD யை ஆய்வு செய்ததில் ஆறு புகைப்படங்கள் மற்றும் ஐந்து காணொளி பதிவுகள் இருந்ததை காண முடிந்தது. புகைப்படங்கள் பற்றிய விவரங்கள் பத்தி எண். 3.1ஐ வரிசை எண். 1a முதல் 1f வரையிலும் காணொளி பதிவு பற்றிய விவரங்களை பத்தி எண். 3.1ல் வரிசை எண். 2a முதல் 2e வரையிலும் என்னுடைய அறிக்கையில் கூறியுள்ளேன்.

மேலும் புகைப்படங்கள் பத்தி எண். 3.1ல் வரிசை எண். 1a முதல் 1f வரையிலும் கூறியுள்ளவற்றை புகைப்படம் மற்றும் காணொளி பதிவுகளின் மெய்த்தன்மையை உறுதிபடுத்தும் Mandet என்ற மென்பொருளை கொண்டு ஆய்வு செய்ததில் இப்புகைப்படங்களின் முன்புலம் மற்றும் பின்புலம் ஆகியவற்றை வெட்டுதல்/ஒட்டுதல்/Cloning போன்றவற்றிற்கான எவ்வித ஆதாரங்களையும் காண முடியவில்லை. மேலும் இம்மென்பொருள் DCT Mapping, Noise Mapping and Error Level Analysis ஆகியவற்றில் முரண்பாடுகளை வெளிப்படுத்தவில்லை. எனவே இந்த ஆறு புகைப்படங்களும் மெய்த்தன்மை வாய்ந்தவை என்பதையும் எவ்வித கையாளுதல்களும் அற்றது என்பதை காட்டுகிறது. என்னுடைய அறிக்கையில் அவ்வாறே வழங்கியுள்ளேன்.

இதேபோல் பத்தி எண். 3.1ல் வரிசை எண் 2a முதல் 2e வரையிலும் கூறியுள்ள காணொளி பதிவுகளை உறுதிபடுத்தும் Mandet என்ற மென்பொருளை கொண்டு ஆய்வு செய்ததில் இந்த காணொளிகளின் பதிவாகியிருக்கும் நிகழ்வுகளுடன் பின்புலமும் தொடர்ச்சியாக இருந்ததை

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2025.10.17 13:53:39 +0530

காணமுடிந்தது. மேலும் இந்த மென்பொருளானது ஒளியின் நிலை , ஒளி கூராக்கம் (Resolution), Histogream, Noise Deviation and Motion ஆகியவை அடுத்தடுத்த பிரேம்களுக்கு இடையே எவ்வித முரண்பாடுகளையும்/விலகல்களையும் (No inconsistency/Deviation) வெளிப்படுத்தவில்லை. எனவே இந்த காணொளி பதிவுகள் மெய்த்தன்மை வாய்ந்தவை என்பதையும் எவ்வித கையாளுதலும் அற்றது என்பதையும் காட்டுகிறது. என்னுடைய அறிக்கையில் அவ்வாறே வழங்கியுள்ளேன்.

என்னுடைய கருத்துரையின்படி பத்தி எண். 3.1ல் கூறப்பட்டுள்ள ஆறு புகைப்படங்கள் மற்றும் ஐந்து காணொளி பதிவுகள் மெய்த்தன்மை உடையவை ஆகும். அவ்வாறே இறுதி அறிக்கையில் வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் அறிக்கை மற்றும் கடிதம் எங்கள் அலுவலகத்திலிருந்து நானும் எங்கள் அலுவலக உதவி இயக்குநரும் கையெழுத்திட்டு துணை இயக்குநர் மூலமாக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தோம். அந்த கடிதம் மற்றும் அறிக்கை **அ.சா.ஆ.34**.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை

Thiru. Anto Pratheep,
Junior Scientific Officer,
Regional Forensic Science Department,
Mylapore,
Chennai.

Tmt. C. Malaikolunthi,
Assistant,
PCR Court,
Ramanathapuram.

Co coordinator
Remote site

Deponent

Co coordinator
Court site

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2025.10.17 13:53:43 +0530